**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்.சி.ஓ.பி. எண். 229/2024**

**ம.சா. 1**

நாள்: 07.02.2026

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கௌசல்யா | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இம்மனுவில் 1 ம் மனுதாரர். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

<u>ஆவணங்கள்</u>

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | 24.04.2024 | ம.சா.ஆ.1 | விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை | வலைளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| 2) | 25.04.2024 | ம.சா.ஆ.2 | TN 69 BM 2974 சரக்கு வாகனத்திற்கான விபத்து ஆய்வு அறிக்கை | ஜெராக்ஸ் நகல் |



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.02.07 17:33:10 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 3) | 24.04.2024 | ம.சா.ஆ.3 | பார்வை மகஜர் | வலைளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| 4) | 24.04.2024 | ம.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | வலைளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| 5) | -- | ம.சா.ஆ.5 | TN 69 BM 2974 வாகனத்தை ஓட்டிய நபரின் ஓட்டுநர் உரிமம் | ஜெராக்ஸ் நகல் |
| 6) | 10.05.2024 | ம.சா.ஆ.6 | எனது கணவர் ராஜ்குமாரின் இறப்பு சான்றிதழ் | வலைளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| 7) | 18.09.2024 | ம.சா.ஆ.7 | எனது கணவர் ராஜ்குமாருக்காக வாரிசு சான்றிதழ் | வலைளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| 8) | 19.09.2023 | ம.சா.ஆ.8 | 2ம் மனுதாரர் மகதியின் பிறப்பு சான்றிதழ் | வலைளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| 9) | -- | ம.சா.ஆ.9 | 1, 3 மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டைகள் | ஜெராக்ஸ் நகல் |
| 10) | -- | ம.சா.ஆ.10 | எனது கணவரின் பாஸ்போர்ட் | அசல் |
| 11) | 27.04.2024 | ம.சா.ஆ.11 | எனது கணவருக்கான பிரேத பரிசோதனை அறிக்கை | வலைளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| 12) | 29.07.2025 | ம.சா.ஆ.12 | குற்ற இறதி அறிக்கை | வலைளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.07 17:33:13 +0530

மேற்படி ம.சா.ஆ.1, 3, 4, 6, 7, 8, 11 மற்றும் 12 வளைத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட எலக்ட்ரானிக்ஸ் எவிடன்ஸ் என்பதால் BSA பிரிவு 63B (4) ன்படி சான்றிதழ் இணைக்கப்படவில்லை. எனவே மேற்படி சான்றிதழ் தாக்கல் செய்வதை பொறுத்து மேற்படி ஆவணத்தின் ஏற்றுக்கொள்ளும் தன்மை குறித்து பின்னர் தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் 2019 பிறகு வெளிநாட்டிற்கு போகவில்லை என்றால் சரியல்ல, 2020ல் சென்றார். விபத்து நடந்த சமயத்தில் என் கணவர் இராமநாதபுரத்தில் தான் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக என் கணவர் மாதம் ரூ.35,000/- சம்பாதித்து வந்தார் என்று மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

என் கணவர் பின்னால் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையை கடந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவுதான் காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த மனுவினை குறிப்பிட்ட காலத்திற்குள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத காரணத்தினால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் இழப்பீட்டினை மிகைப்படுத்தி கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.07 17:33:16 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .